# වාර්ෂික කාර්යසාධන වාර්තාව
# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
# Annual Performance Report












## සත්ත්ව නිෂ්පාදන හා සෞඛ්‍ය දෙපාර්තමේන්තුව
## கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்
## Department of Animal Production and Health

# වාර්ෂික කාර්යසාධන වාර්තාව

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

# ANNUAL PERFORMANCE REPORT

# 2017


**සත්ත්ව නිෂ්පාදන හා සෞඛ්‍ය දෙපාර්තමේන්තුව**

**கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்**

**Department of Animal Production and Health**

**Peradeniya**

**Sri Lanka**

**Tel : 94 - 081 – 2388337 / 2388462**

**Fax : 94 – 081 - 2388619**

**Web Site: www.daph.gov.lk**

## உள்ளடக்கம்

பக்க இல.


| | | |
|---|---|---|
| 1. | அறிமுகம் | 1 |
| 2. | 2017 ஆம் ஆண்டுசெயற்படுத்தப்பட்டவேலைத்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களின் செயலாற்றுகை | 3 |
| | 2.1. கால்நடைவளர்ப்புத் துறைஅபிவிருத்தி | 3 |
| | 2.2. மனிதவளஅபிவிருத்தி | 7 |
| | 2.3. சட்டம் மற்றும் நீதிநடைமுறைசெயற்பாடுகள் மற்றும் சேவைகள | 9 |
| | 2.4. 2017 ஆம் ஆண்டுசெயற்படுத்தப்பட்டவேலைத்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களின் நிதிமுன்னேற்றம் | 11 |
| | 2.5. நிதிஒதுக்கீடுமற்றும் செலவினச் சுருக்கம் - 2017 | 12 |
| | 2.6. நிதிஒதுக்கீடுமற்றும் செலவு - 2017 | 12 |
| | 2.7. திணைக்களவருமானசுருக்கம் – 2017 | 12 |
| | 2.8. அரசஊழியர்களின் முற்பனக்கணக்குபி | 13 |

## 1. அறிமுகம்

1978 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் இலங்கையில் கால்நடை அபிவிருத்திக்கான பிரதான அரச நிறுவனம் ஒன்றாகும். தற்போது கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் கிராமிய பொருளாதாரம் பற்றிய அமைச்சின் கீழ் செயற்படுகின்றது. கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் நாட்டில் ஏற்படுகின்ற கால்நடை நோய்களை கட்டுப்படுத்துதல் மற்றும் ஒழித்தல் போன்றவற்றிற்காக சட்டரீதியில் உருவாக்கப்பட்ட ஒரு தேசிய நிறுவனமாகும். அத்துடன் இத்துறையில் ஆய்வு மற்றும் அபிவிருத்தி, தொழில்நுட்பத் தலைமைத்துவத்திற்கான ஏற்பாடுகள், மற்றும் கால்நடை இனவிருத்தி நடவடிக்கைகள் பொருட்டு விஷேட ஆலோசனைகள் மற்றும் உதவி, சேவைகளை வழங்குதல் தொடர்பாக சட்டரீதியான அதிகாரத்தை கொண்டுள்ள ஒரு தேசிய நிறுவனமாகும். தீவு முழுவதையும் உள்ளடக்கியதாக மேற்கொள்ளப்படுகின்ற வேறு பிரதான நடவடிக்கைகளுள் கால்நடை வளர்ப்பு தொடர்பில் பயனாளிகளை பயிற்றுவித்தல், இத்துறையை மேம்படுத்தும் பொருட்டு உரிய கருத்திட்டங்களை தயாரித்தல், பொருளாதார மதிப்பீடு செய்தல் மற்றும் விஷேட அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்தல் என்பனவாகும். கால்நடைவள துறையில் அபிவிருத்தி வசதிகளை திட்டமிடுவதன் பொருட்டு இத்திணைக்களத்தினால் சட்டங்கள் கொண்டு செயற்படுத்தப்படுகின்றன.

மாகாண சபைகளினது உருவாக்கத்துடன், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் வெளிக்கள செயற்பாடுகள் 9 மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களங்களுக்கு பால் பகிர்ந்தளிக்கப்பட்டன.

தேசிய கா.உ.சு. திணைக்களத்தினால் தொழில்நுட்ப தலைமைத்துவம், நிபுணத்துவச் சேவை, மற்றும உதவி சேவை என்பவற்றை மா.கா.உ.சு. திணைக்களம் வழங்குவதன் மூலம் கால்நடை துறையில் பாரிய செயற்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மிருக வைத்திய பணிமனைகள் மிருக வைத்தியர்களினால் முகாமை செய்யப்படுகின்றன. இதுவே கா.உ.சு. திணைக்களத்தின் பிரதான செயற்பாட்டு அலகாகும். 327 பிரதேச மிருக வைத்திய பணிமனைகள் நாடு முழுவதிலும் பரந்து காணப்படுகின்றன. இப்பணிமனைகள் மா.கா.உ.சு. திணைக்களத்தின் கீழ் செயற்படுகின்றன. சகல கால்நடை அபிவிருத்தி நிகழ்ச்சிகளும் இவற்றின் மூலம் செயற்படுத்தப்படுகின்றன.

### இலக்கு

இலங்கையில் சமூக பொருளாதார அபிவிருத்தியை நோக்கி கால்நடைவளர்ப்புத் துறையில் முதன்மை நிறுவனமாக இருத்தல்.

### நோக்கம்

கால்நடைகளின் ஆரோக்கியத்தை பராமரித்தல், உற்பத்தியை அதிகரித்தல் உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்தல் மற்றும் உணவு முன்னேற்பாட்டிற்கு பங்களிப்பு செய்தல் என்பவற்றினூடாக கால்நடைத் துறையில் நிலையான அபிவிருத்தியை அடைவதற்கு தொழில்நுட்ப வழிகாட்டலினையும் ஆதரவினையும் வழங்குதல்.

## செயற்பாடுகள்

- திறனான நோய்த்தடுப்பு முறையினை உறுதிப்படுத்துதல் மற்றும் கால்நடை துறையில் தேகாரோக்கியமான கால்நடை எண்ணிக்கையை பராமரித்தல் மற்றும் பொதுச் சுகாதாரம்.
- விலங்கு மரபணு வளங்களினது உச்சப்பயன்பாட்டினை மேம்படுத்துதல்
- தரமான விலங்குணவு மற்றும் ஊட்டல் வளங்களின் பயன்பாட்டினை உறுதிப்படுத்துதல்.
- முறையான கால்நடை வளர்ப்பு பயிற்சியினை மேம்படுத்துதல் வசதியளித்தல்
- நிலையான கால்நடை அபிவிருத்தியை நோக்காகக கொண்டு ஆய்வு அபிவிருத்திகளை மேற்கொள்ளல்.
- தொழில்நுட்ப திறன்வாய்ந்த மனித வளத்தை அபிவிருத்தி செய்தல்
- போதிய தகவல் பரிமாற்றலினை உறுதிப்படுத்துதல் மற்றும் தொழில்நுட்ப மாற்றீடு மற்றும் பரிமாற்றம்.
- துறைரீதியான பங்குபற்றுகையுடன் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளினை அமைத்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- விலங்கு மூலங்களின் உற்பத்தி பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்
- சிறந்த கால்நடை வளர்ப்பு செயன்முறையை மேம்படுத்தல் வசதிகள் வழங்குதல்.
- கால்நடைகளது நலனோம்பலை உறுதிப்படுத்தல்.
- திணைக்களச் செயற்பாடுகளின் திறனான முகாமைத்துவத்தினை உறுதிப்படுத்துதல்.

# 2. 2017 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களின் செயலாற்றுகை

## 2.1. கால்நடைவளர்ப்புத் துறை அபிவிருத்தி

### 2.1.1. பாற்பண்ணை

**அ. கால்நடை துறையில் தொற்றுநோய்களை கட்டுப்படுத்துதல்**

உற்பத்தி மற்றும் திறன் மேம்பாட்டின் பொருட்டு சுகாதாரப் பண்புகளுடன் கால்நடைத் தொகையினை நடாத்திச் செல்வதற்கு நாடளாவிய ரீதியில் விலங்கு சுகாதார சேவையில் சிறந்த மற்றும் திறனான தடுப்பு மற்றும் சிகிச்சையளிப்பு சேவையை அமுல் செய்கின்றது. இலங்கையில் விலங்கு தொற்றுநோய் பரவுவதை தடுக்கும் பொருட்டு தடுப்பூசி ஏற்றல் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் மற்றும் மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்துடன் இணைந்து செயற்படுகின்றது.

கால்வாய் நோய், தொண்டை அடைப்பான், கருங்காலி நோய் என்பவற்றிற்கு எதிரான தடுப்பூசிகள் பூருசெல்லோசிஸ் தடுப்பூசிகள் கா.உ.சு. திணைக்களத்தின் கால்நடை ஆராய்ச்சி நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்படுகின்றன.

குறிப்பிட்ட காலப்பகுதியினுள் கா.உ.சு. திணைக்களம் கால்வாய்நோய் தடுப்பூசி சொட்டுக்கள் 172,400, தொண்டை அடைப்பான் தடுப்பூசி அளவுகள் 322,520 உம், கருங்காலி நோய்க்கான தடுப்பூசி அளவுகள் 197,142 உம், மற்றும் புரூசெல்லா நோய்க்கான தடுப்பூசி அளவுகள் 22,000 உம் உற்பத்தி செய்தது. 2017 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் கால்வாய் நோய்க்கு எதிராக தடுப்பூசி 684,961 விலங்குகளுக்கும், கருங்காலி நோய்க்கு எதிராக 92,750 விலங்குகளுக்கும், தொண்டை அடைப்பான் நோய்க்கு எதிராக 146,288உம், புரூசெல்லா நோய்க்கு எதிராக 5,603 விலங்குகளுக்கும் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன.


தடுப்பூசி உற்பத்தி


கால்நடைகளுக்கு களத்தில் தடுப்பூசி ஏற்றல்

**ஆ. கால்நடைகளின் எண்ணிக்கையை மேம்படுத்தும் பொருட்டு கால்நடைகளின் இனவிருத்தி.**

உள்நாட்டில் மாடுகள் மற்றும் எருமைகளின் எண்ணிக்கையினை உயர்த்துவதற்காகவும் மற்றும் உள்நாட்டு பால் உற்பத்தியினை மேம்படுத்தவும் அமுல் செய்யப்பட்ட பிரதான நிகழ்ச்சியாக தரமான எருமை விந்துகளை பயன்படுத்தி செயற்கைமுறை சினைப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டன. நாட்டில் பால் உற்பத்தியினை மேம்படுத்துதல், விந்து உற்பத்தி மற்றும்

பகிர்ந்தளித்தல், செயற்கைமுறை சினைப்படுத்தல் தொழில்நுட்பவியலாளர்களுக்கு பயிற்சி அளித்தல், புல்/வெட்டும் புல் உற்பத்தி ஆகியவற்றில் பயிற்சி வழங்குதல் என்பன இந்நிகழ்ச்சி நிரலில் காணப்படும் பிரதான உள்ளடக்கங்களாகும். இவ்வருடத்தினுள் குண்டசாலை மற்றும் பொலன்னறுவை செயற்கைமுறை சிணைப்படுத்தல் நிலையங்களில் 300,627 டொஸ் சுக்கில விந்து உற்பத்தி செய்யப்பட்டன. பிரதேச மிருகவைத்திய பணிமனைகளினால் 234,924 செயற்கைமுறை சினைப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. வெளிக்கள மிருக வைத்தியர்களினால் பசுக்கள்/இளம் பசுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட சினைப்படுத்தலினால் 70,347 கருத்தரிப்புக்கள் இனங்காணப்பட்டன. மீளாய்வுக் காலப்பகுதியில் 66,184 கன்றுகள் ஈன்றெடுக்கப்பட்டுள்ளன.



செயற்கை முறை சினைப்படுத்தல்நிலையம் - கண்டசாலை



செயற்கை முறை சினைப்படுத்தல் - களத்தில்

**இ. இளம் பசுக்களின் உற்பத்தி நிகழ்ச்சி**

செயற்கைமுறை சினைப்படுத்தலினூடாக பிறந்த பெண் கன்றுகளின் முறையான முகாமைத்துவம் பண்ணை மட்டத்தில் பிரதானமாக மேற்கொள்ளப்பட்டன. அதனால் செயற்கைமுறை சினைப்படுத்தலின் நன்மைகளை உண்மையில் அடைந்து கொள்ள முடியும். செயற்கைமுறை சினைப்படுத்தலினால் பிறக்கின்ற பெண்கன்றுகளை பதிவுசெய்தல், நாட்டில் இனப்பெறுக்கக்கூடிய மாடுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு தொழில்நுட்ப மதியுணர் சேவையினை வழங்குதல், உள்ளீடுகள் வழங்குதல் மற்றும் பால் உற்பத்தியை அதிகரித்தல் என்பவற்றினை அடைந்து கொள்வதற்காகவே இந்நிகழ்ச்சித்திட்டம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் இக்காலப்பகுதியில் 21,182 இளம் பசுக்கள் பதிவு செய்யப்பட்டன.

**ஈ. கால்நடை ஆராய்ச்சி நிறுவனத்தில் பால் தொழில்நுட்ப ஆய்வுகூடத்தை ஸ்தாபித்தல்**

பால் தொழில்நுட்ப ஆய்வுகூடம் ஒன்று வழமையான செயற்பாடுகளுக்காக சுயாதீன ஆய்வுகளின் நிமித்தம் மற்றும் பிரதேச கால்நடை ஆய்வு நிலையங்களின் மத்திய நிலையமாக திகழ்வதற்கும் திணைக்களத்தின் மிருக ஆராய்ச்சி நிலையத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. பால் மற்றும் பால் உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்துதல், பால் உற்பத்தியாளர்களுக்கு உதவி நல்குதல் என்பன இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், ஸ்தாபிக்கப்பட்ட பால் தொழில்நுட்ப செயற்பாடுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. தற்போது இது பாற்பண்ணை துறைக்கு சேவையை வழங்குவதற்கும் ஏனைய பொருத்தமான நிறுவனங்களுக்கு பகுப்பாய்வு, ஆலோசனை மற்றும் ஆய்வுகூட சேவைகளை வழங்குவதற்கும் மற்றும் வெளிக்கள ஆய்வுகள் மற்றும் பயிற்சிகள் வழங்குவதற்கும் தயாராக

உள்ளது. பகுப்பாய்வு காலப்பகுதியின் போது பால் மாதிரிகள் 1,739 பகுப்பாய்வு செய்து அறிக்கை செய்யப்பட்டுள்ளன.

**உ. மடியழற்சி நோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்**

மடியழற்சி நோயை நூற்றிற்கு 30 இல் இருந்து 1 ஆக குறைப்பதன் ஊடாக நூற்றிற்கு 25 உற்பத்தி மேம்படுத்துவதன் நோக்கில் 2014 இல் ஆரம்பித்து வைக்கப்பட்டது. மீளாய்வுக் காலப்பகுதியில் இந்நிகழ்சிசித் திட்டத்தின் கீழ் 23,888 மடியழற்சி நோய்சிகிச்சை வேதியல்கரைசல் உற்பத்தி செய்யப்பட்டது.




மடியழற்சி நோய்கான சிகிச்சை அளித்தல்

## 2.1.2. ஆடு வளர்ப்பு

இத்திணைக்களம் தரமான இனப்பெருக்க ஆடுகளின் கேள்விக்கு முகம் கொடுக்கும் வன்னம் முறையே இம்பூலன்தன்ட தெலஹர பிரதேசங்களில் இரண்டு ஜமுனாபாரி ஆட்டு பண்ணைகளை பராமரித்து வருகின்றது. இக்காலப்பகுதியில் உற்பத்தி மற்றும் உற்பத்தி திறன் அதிகரிப்பதற்காக அவர்களது களஞ்சியங்களை உயர்த்துவதற்காகவும் 497 ஜமுனாபாரி ஆடுகளும் மற்றும் 10 உயர்தர ஆடுகளும் ஆட்டுப் பண்ணையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், ஆடுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக வெளிக்கள மட்டத்தில் 2017 ஆம் ஆண்டு இறுதியின் போது 4,808 செயற்கைமுறை சினைப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன.



ஆடு இனவிருத்திப் பண்ணை – இம்புலன்தன்ட



ஆடு இனவிருத்திப் பண்ணை – தெலஹர

## 2.1.3. கோழி வளர்ப்பு

நாட்டில் இன்று கோழி வளர்ப்பு துறையானது தனியார் துறையின் கையில் ஆதிக்கம் செலுத்துகின்றது. அரச துறையின் பங்களிப்பானது அதன் ஒழுங்கு முறையையும் தரத்தினையும் உறுதிப்படுத்துவதாகும். சில குறிப்பிட்ட நாடுகளில் காணப்பட்ட அதி தீவிரமாக பரவுகின்ற பறவைக் காய்ச்சல் காரணமாக நாட்டிற்குள் வருகை தரும் பெற்றோர் மற்றும் பெற்றோரது பெற்றோர் பறவைகள் வருகையினை விலங்கு நோய் தடுப்பு உத்தியோகத்தர்களினால் கட்டுப்படுத்தப்பட்டன. அவ்வாறே அவற்றினை இறக்குமதி செய்கின்ற போது இந்நாட்டில் அந்நோய் பரவுவதை தடுப்பதற்காக விமானநிலையத்திலும் துறைமுகத்திலும் அமையப் பெற்றுள்ள விலங்கு நோய் தடுப்பு பணிமனையின் ஊடாக விஷேடமாக நோய் தடுப்பு வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டது.

நாட்டில் இறைச்சிக்காக வளர்க்கப்படும் கோழிகளின் பெற்றோர்களில் சுமார் நூற்றிற்கு 73.82 உள்நாட்டில் மூன்று பெற்றோர் பண்ணைகளில் இருந்து உற்பத்தி செய்யப்பட்டது. 2017 ஆம் ஆண்டு இறுதி வரை மொத்தமாக 953,157 புரோய்லர் பெற்றோர் உள்நாட்டில் இப்பண்ணைகள 03 இல் இருந்து உற்பத்தி செய்யப்பட்டன. அதற்கும் மேலாக புரோய்லர் பெற்றோர்களது பரம்பரைக்கு உரிய விலங்குகள் 33,136 உம் புரொய்லர் மாபியா பெற்றோரது பெற்றோர்கள் 337,952 மற்றும் 101,880 முட்டையிடும் பெற்றோர்களும் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டன.

இனவிருத்திப் பண்ணைகளில் இருந்த இக்காலப்பகுதியில் மொத்தமாக 149.18 மில்லியன் புரோய்லர் குஞ்சுகளும் மற்றும் 8.50 மில்லியன் முட்டை கோழிக் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டன.

அவ்வாறே, சிறு அளவிலான கோழி உற்பத்தி பண்ணையாளர்களுக்கு கால்நடை ஆராய்ச்சி நிறுவனத்தினால் ரெனிகேட் நோய்க்கான தடுப்பூசிகள் இலவசமாக வழங்கப்பட்டன. இக்காலப்பகுதியில் மொத்தமாக ரெனிகேட் நோய்க்கு எதிரான தடுப்பூசி 4,979,600 டொஸ்கள் உற்பத்தி செய்யப்பட்டன. 2017 இறுதியின் போது ரெனிகேட் நோய்க்கு எதிராக 2,246,509 கோழிகளுக்கு தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன.

## 2.1.4. கால்நடை சுகாதார மேம்பாடு

### அ. அதி தீவிரமாக பரவுகின்ற பறவைக் காய்ச்சலினை தடுத்தல்

உலகலாவிய மட்டத்தில் பல்வேறு நாடுகளிலும் பெரிதும் பாதிக்கப்பட்ட பறவைக்காய்ச்சல் நோயானது இன்னும் இலங்கையை பெரிதும் தாக்கவில்லை. இந்நோய் நாட்டினுள் நுழைந்தால் அதனை கட்டுப்படுத்தவும் ஒழிக்கவும் என முறையான திட்டம் ஒன்றினை கா.உ.சு.திணைக்களம் வகுத்துள்ளது. பல பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

கால்நடை ஆராய்ச்சி நிறுவனம் நோய் கண்டறியும் இயலுமை வசதிகளை விஸ்தரித்துள்ளது. தேசிய மற்றும் மாகாண கா.உ.சு. திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு இந்நோயை தொடர்பாக அதனை கட்டுப்படுத்துதல் மற்றும் ஒழித்தல் என்பன தொடர்பில் பயிற்சி கருத்தரங்குகள் நடாத்தப்பட்டு நன்கு பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.

பறவைக் காய்ச்சல் பாதுகாப்பு நிகழ்ச்சியின் கீழ் மொத்தமாக 19,195 வெளிக்கள மாதிரிகள் பரீட்சிக்கப்பட்டதுடன் அதற்கு எத்தகைய எதிர் விளைவுகளும் காணப்படவில்லை.

**ஆ. நோய்த்தடுப்பு மற்றும் பரிசோதனை சேவைகளினை வலுப்படுத்தல்**

இந்நாட்டிற்கு எவ்விதத்திலேனும் வெளிநாடுகளில் இருந்து விலங்கு நோய் ஒன்று உள்நுழைவதை எதிர்க்கின்ற முதலாவது பாதுகாப்பு முறை கால்நடை தொற்று நோய் தடுப்பு சேவையாகும். இனவிருத்தி கோழிகள் இறக்குமதி செய்ததன் பின்னர் விலங்கு நோயை தடுப்பதற்கும் மற்றும் ஏற்றுமதி சந்தையின் பொருட்டு அழகு மீன் வளர்ப்புத் துறை ஆரோக்கியமானதாகவும் தரம் மிக்கதாகவும் மேம்படுத்தும் நோக்கில் இக்கருத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இக்காலப்பகுதியினுள் இறக்குமதி செய்யப்பட்ட ஒரு நாள் கோழிக் குஞ்சுகள் 55 தொகுதிகள் பரிசோதிக்கப்பட்டன. மேலும் 69 மீன் பண்ணைகள் பரீட்சிக்கப்பட்டன.

## 2.2. மனித வள அபிவிருத்தி

**அ. இயலுமையை விருத்தி செய்தல் மற்றும் கல்வி மற்றும் பயிற்சி**

கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கும் பண்ணையாளர்களுக்கும் விலங்கு வேளாண்மை தொடர்பில் இயலுமை விருத்தி செய்யும் நிகழ்ச்சியினை மேற்கொள்கின்றது. மீளாய்வு காலப்பகுதியின் போது மொத்தமாக 16 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. இதில் முயற்சியாளர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் பண்ணையாளர்கள் 263 பேர் இதில் கலந்து கொண்டனர். கரந்தகொல்லை மற்றும் சீப்புக்குளம் பிரதேசத்தில் அமையப் பெற்றுள்ள கால்நடை வளர்ப்பு பாடசாலையில் 2 வருட டிப்ளோமா பாடநெறிக்காக 135 பேர் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.


டிப்ளோமா மாணவர்களது பண்ணை பயிற்சி


டிப்ளோமா மாணவர்களது பண்ணை பயிற்சி


பண்ணையாளர்களுக்கான பண்ணை பயிற்சி


பெறுமதி சேர்க்கப்பட்ட பால் உற்பத்திகள் தொடர்பான பயிற்சி

## ஆ). தகவல்களை பரப்புதல்

முறையே இத் திணைக்களம் 12 தேசிய மட்ட கண்காட்சிகளில் பங்குபற்றியது அவை பின்வருமாறு

| கண்காட்சியின் பெயர் | இடம் |
|---|---|
| நிலையான அபிவிருத்தி பாடசாலை சமூகம் ஸ்தாபித்தல் | கென்கல்ல |
| கல்வி கலாசார கண்காட்சி | கொடகேவல |
| விளையாட்டு மற்றும் தேகப்பயிற்சி தேசிய வேலைத்திட்டம் | கெட்டம்பே |
| திகாமடுலு நவொதய சந்தை கண்காட்சி வியாபார வழிகாட்டல் | அம்பாறை |
| யொவுன் புரய – 2017 | திருகோணமலை |
| நிலையான யுகம் கண்காட்சி மற்றும் புத்தாண்டு சந்தை | BMICH கொழும்பு |
| புஷ்பதான மகளீர் கல்லூரி 75 ஆவது ஆண்டு நிறைவு கண்காட்சி | கண்டி |
| "Techno – Signs" கண்காட்சி | பேராதனை |
| "Lanka Livestock 17" கண்காட்சி | கொழும்பு |
| கால்நடைவள கண்காட்சி | யாழ்ப்பாணம் |
| "தேசிய உணவு உற்பத்தி வாரம்" கண்காட்சி | கண்ணொறுவை |
| உத்தியோகபூர்வ இலக்கு – ஜனாதிபதி நடமாடும் சேவை | வவுனியா |

இவற்றின் ஊடாக ஏற்கனவே கால்நடை துறையில் பண்ணையாளர்களுக்கும் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்களுக்கும் கால்நடை துறையில் ஈடுபட்டுள்ள சிறிய நடுத்தர முயற்சியாளர்களுக்கும் புதிய தொழில்நுட்ப தகவல்களினை வழங்கி கல்வியறிவூட்டவும் இத்திணைக்களத்தால் முடிகின்றது. இக்காலப்பகுதியில் மொத்தமாக 20,554 தகவல்கள் அடங்கிய கையேடுகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் 77 தொலைக்காட்சி வானொலி விளம்பர நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.




நிலையான பாடசாலை அபிவிருத்தி நிலையங்களை ஸ்தாபித்தல் (கெங்கல்ல)




கொடகாவலை களுத்துறை மாவட்டத்தில் கல்வி கலாசார கன்காட்சி இடம் பெறல்





"Lanka Livestock 17" கன்காட்சி (கொழும்பு)





கால்நடை கண்காட்சி யாழ்ப்பானம்

## 2.3. சட்டம் மற்றும் நீதிநடைமுறை செயற்பாடுகள் மற்றும் சேவைகள்

### அ. கோழிப் பண்ணைகளின் பதிவு

பிரதேச மிருகவைத்தியப் பணிமனைகளில் கோழிவளர்ப்பு பண்ணைகளின் பதிவு 2017 ஆம் ஆண்டிலும் தொடரப்பட்டது. இவ்வாறு பண்ணைகள் பதிவு மேற்கொள்வதினூடாக, பரவு நோய்களினை கட்டுப்படுத்துதல், தொழில்நுட்ப வசதிகள் வழங்குதல் மற்றும் கோழி உற்பத்திகளின் தரம் கட்டுப்பாடு என்பன மிகவும் இலகுவாக மேற்கொள்ளப்படுகின்றன. இக்கருத்திட்டத்தினூடாக 2017 ஆம் ஆண்டு மொத்தமாக 8,148 கோழிப்பண்ணைகள் பிரதேச மிருகவைத்தியப் பணிமனைகளால் பதிவு செய்யப்பட்டன. அத்துடன் அவற்றிற்கான இலத்திரனியல் தரவுத்தளம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

### ஆ. கால்நடைகளை இனங்காணல் மற்றும் மத்திய கால்நடை பண்ணைகளின் தரவுத்தளம் என்பவற்றின் ஸ்தாபித்தல்

இக்கருத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள பண்ணைகளுக்கு வெளிக்கள உத்தியோகத்தர்கள் விஜயம் செய்வார்கள். அத்துடன் இங்கு கால்நடைகள் காதடையாளம் இடப்படும். இக்காலப்பகுதியில் 120,196 கால்நடைகள் காதடையாளமிடப்பட்டுள்ளன. அடுத்துவரும் காலங்களில் மீதமான விலங்குகள் இனங்காணப்படும். இதன் மூலம் மாடுகளது நம்பத்தகுந்த எண்ணிக்கையை கணிப்பிட முடியும். சட்டவிரோதமான கொண்டுசெல்லுதல், அறுப்புகள் என்பன தடுக்கப்ட்டும். அத்துடன் எதிர்கால பால் உற்பத்தியை எதிர்வு கூறுதல் திறனற்ற விலங்குகளை நீக்குதல் போன்றன இலகுவில் மேற்கொள்ள முடியும்.



காதடையாளம் இடல்

**இ. அரசாங்க மிருக வைத்திய பணிமனைகளில் சேவை வழங்கும் முறைமையினை மேம்பாடுத்தல்**

கிராமிய கால்நடை சமூகத்தின் தேவைகள் பொருட்டு இத்திணைக்களத்தின் பிரதான செயற்பாட்டு அலகாக அரசாங்க மிருக வைத்திய பணிமனைகள் திகழ்கின்றன. இப்பணிமனைகளில் அமையப் பெற்றுள்ள வசதிகளுக்கு ஏற்ப அடிமட்டத்தில் இருந்து சேவைகள் வழங்கப்படுகின்றன. நோய் கண்டறிதழ், விரிவாக்கல் சேவைகளை திட்டமிடல் பொருட்டு தொடர்பாடல் மற்றும் போக்குவரத்து வசதிகள் என்பவற்றை ஆகக் குறைந்த அளவிலேயே வழங்கப்படுகின்றன.

2016 இல் நிர்மாணப்பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்ட கேகாலை மாவட்டத்தின் தெரணியகல மிருக வைத்தியப் பணிமனையின் நிர்மாணப் பணிகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன. திருகோணமலை மாவட்டத்தில் திருகோணமலை மிருக வைத்தியப் பணிமனை மற்றும் ஹம்பந்தோட்டை மாவட்டத்தில் லுனுகம்வெஹர மிருக வைத்தியப் பணிமனை நிர்மாண நடவடிக்கைகள் நூற்றிற்கு 75 முடிவுறுத்தப்பட்டுள்ளன.



தெரனியகல மி.வை.பணிமனை

நான்கு புதிய மிருக வைத்தியப் பணிமனைக அரல்கன்வில, அயகம, களுவாஞ்சிக்குடி பஸ்கொட ஆகியவைகளுக்கான கட்டுமானப்பணிகள் முறையே பொலநறுவை, இரத்தினபுரி, மட்டக்களப்பு மாத்தறை மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்ட:டு 2018 இலும் இம்மிருக வைத்தியப் பணிமனை கட்டுமானப் பணி தொடரரும்.

## 2.4. 2017 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களின் நிதி முன்னேற்றம்

(2017 டிசம்பர், 31)

| நிகழ்ச்சித்திட்டம்/கருத்திட்டம் | 2017 நிதி ஒதுக்கீடு (ரூ.மி) | 2017 நிதி முன்னேற்றம் (ரூ.மி) |
|---|---|---|
| சமூக பொருளாதார அபிவிருத்தி வேலைத்திட்டம் | 1.30 | 1.28 |
| தரப்பாதுகாப்பு வேலைத்திட்டம் | 1.20 | 1.20 |
| கால்நடைகளின் தொற்றுநோய்களை தடுக்கும் வேலைத்திட்டம் | 35.00 | 34.80 |
| கால்நடை சுகாதார மேம்பாட்டு வேலைத்திட்டம் | 5.00 | 3.35 |
| கால்நடை ஆராய்ச்சி வேலைத்திட்டம் | 27.00 | 26.74 |
| கால்நடை இனவிருத்தி வேலைத்திட்டம் | 150.00 | 86.50 |
| கால்நடைவள பிரள்யப்படுத்தும் வேலைத்திட்டம் | 3.00 | 2.91 |
| பசுக்கன்றுகளை அதிகரிக்கும் வேலைத்திட்டம் | 60.00 | 58.67 |
| மிருக வைத்தியப் பணிமனைகளின் சேவை வழங்கலை மேம்படுத்தல் | 125.00 | 31.41 |
| கால்வாய் நோய் தடுப்பூசி உற்பத்தி | 25.00 | 20.91 |
| கால்நடைகளை அடையாளப்படுத்தும் வேலைத்திட்டம் | 15.00 | 12.25 |
| கால்நடை தொற்று நோய் தடுப்பு நிலையங்களை விஸ்தரிப்பு மற்றும் நவீனமயப்படுத்தல் | 10.00 | 7.34 |
| பால் தொழில்நுட்ப அலகு ஸ்தாபித்தல் | 10.00 | 7.91 |
| கால்நடை தெழில்நுட்பவியல் வேலைத்திட்டம் | 5.00 | 4.42 |
| புத்தகம் மற்றும் சஞ்சிகை வெளியீடு | 0.50 | 0.50 |
| கால் நடை நோய் தடுப்பை விஸ்தரித்தல் | 40.00 | 19.06 |
| கோழி சுகாதார முகாமையின் ஊடாக கோழி இறைச்சி மற்றும் முட்டை என்பவற்றை ஏற்றுமதி செய்வதற்கான வசதிகளை செய்து கொடுத்தல் | 12.00 | 11.88 |
| இலங்கையின் பாற்பண்ணை துறையை விருத்தி செய்து வர்த்தகரீதியில் பசும் புல் உஉற்பத்தி | 5.00 | 2.72 |
| மடியழற்சி நோய் கட்டுப்பாட்டு வேலைத்திட்டம் | 22.00 | 21.99 |
| நிபுனத்துவ அலகு அபிவிருத்தி வேலைத்திட்டம். | 19.00 | 0.84 |
| **மொத்தம்** | **571.00** | **356.68** |

## 2.5. நிதி ஒதுக்கீடு மற்றும் செலவினச் சுருக்கம் - 2017

| | **மதிப்பிடப்பட்ட ஒதுக்கீடு (ரூ.)** | **திறைசேரியில் இருந்து கிடைத்த மேலதிக ஒதுக்கீடு(ரூ.)** | **தேறிய ஒதுக்கீடு(ரூ.)** | **செலவு(ரூ.)** | **செலவு வீதம்** |
|---|---|---|---|---|---|
| மீண்டுவரும் (ரூ.) | 515,710,000 | 20,000,000 | 535,710,000 | 512,072,538 | 95.59% |
| மூலதன (ரூ.) | 626,500,000 | - | 626,500,000 | 399,887,510 | 63.83% |
| **மொத்தம்** (ரூ.) | **1,142,210,000** | **20,000,000** | **1,162,210,000** | **911,960,048** | **78.47%** |

## 2.6. நிதி ஒதுக்கீடு மற்றும் செலவு - 2017

| | **ஒதுக்கீடு** (ரூ.மி) | **செலவு** (ரூ.மி) | **2017.12.31 மீதி** | **ஒதுக்கீட்டில் செலவு வீதம்** |
|---|---|---|---|---|
| கருத்திட்டம் I | | | | |
| மூலதனச் செலவு | 61 ,500,000 | 49,080,848 | 12,419,152 | 79.81% |
| மீண்டுவரும் செலவு | | | | |
| ஆளுக்குரிய வேதனாளிகள் | 412,950,000 | 405,468,103 | 7,481,897 | 98.19% |
| ஏனைய | 122,760,000 | 106,604,435 | 16,155,565 | 86.84% |
| **மொத்தம்** | **597,210,000** | **561,153,386** | **36,056,614** | **93.96%** |
| கருத்திட்டம் II | | | | |
| மூலதனச் செலவு | 164,000,000 | 134,780,107 | 29,219,983 | 82.18% |
| **மொத்தம்** | **164,000,000** | **134,780,107** | **29,219,983** | **82.18%** |
| கருத்திட்டம் II | | | | |
| மூலதனச் செலவு | 401,000,000 | 216,026,555 | 184,973,445 | 53.87% |
| **மொத்தம்** | **401,000,000** | **216,026,555** | **184,973,445** | **53.87%** |
| மொத்த மூலதனச் செலவு | **626,500,000** | **399,887,510** | **226,612,490** | **63.83%** |
| மொத்த மீண்டுவரும் செலவு | **535,710,000** | **512,072,538** | **23,637,462** | **95.59%** |
| **தேறிய மொத்தம்** | **1,162,210,000** | **911,960,048** | **250,249,952** | **78.47%** |

## 2.7. திணைக்கள வருமான சுருக்கம் – 2017

| **வருமான தலைப்பு இல** | **வருமான விபரம்** | **மொத்த வருமானம்** |
|---|---|---|
| 2002-01-01 | வாடகை | 5,586,876.45 |
| 2002-02-99 | கடன் வட்டி | 3,291,100.57 |
| 2003-01-00 | திணைக்கள விற்பனை | 47,297,878.45 |
| 2003-02-99 | ஏனைய | 4,257,082.92 |
| 2003-99-00 | ஏனைய பெறுகைகள் | 1,192,802.39 |
| 2002-01-99 | ஏனைய வாடகை | 32,700.00 |
| | **மொத்தம்** | **61,658,440.78** |

**பொது வைப்புக் கணக்கு - 2017**

20176.12.31 ஆம் திகதி உள்ளவாறான திணைக்கள பொது வைப்பு கணக்கு மீதி ரூபா 18,489,936.38 ஆகும்.

அது பின்வருமாறு தயார் செய்யப்பட்டுள்ளன.

6000/0000/00/0001/0110/000- 970,875.46
6000/0000/00/0013/0106/000- 6,107,262.99
6000/0000/00/0016/0098/000- 10,404,399.93
6000/0000/00/0002/0153/000- 1,007,398.00

## 2.8. அரச ஊழியர்களின் முற்பனக்கணக்கு பி

| | **வருடாந்தமதிப்பீட்டு எல்லைகள்** | **உண்மைப் பெறுமதி ரூபா** |
|---|---|---|
| மீதி வந்தது | | 75,872,471.39 |
| உச்ச பற்று மீதி | 32,000,000.00 | 34,290,786.30 |
| உச்ச செலவு மீதி | 21,000,000.00 | 29,008,839.65 |
| கடன் மீதியின் உச்ச எல்லை | 120,000,000.00 | |
| | எல்லையை பாதிக்காத செலவுகள் | 5,479,983.16 |
| | மீ/கீ/கொ | 81,154,418.04 |